மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு பிரச்சினை என்றால், வேறு ஒரு பிரச்சினை எழுப்புவதற்காக உங்களிடத்திலே அனுமதி வாங்கியிருக்கிறார்களா? அப்படி வாங்கியிருந்தால், வேறு ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு பிரச்சினை ஒன்றைச் சொல்லியிருக்கிறார். அதை விதி 55-ல் எனக்குக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேறு எதுவும் சொல்லவில்லை. என்னிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னீர்கள், கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களே இன்றைக்குப் பதில் சொல்லியாகிவிட்டது. நானும் அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் வரலாம் என்று சொல்லியாகிவிட்டது. மேற்கொண்டு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) வேறு பிரச்சினை என்றால் அதை முன்கூட்டியே என்னிடம் சொல்லி அதற்கு என்னிடம் அனுமதி வாங்கவில்லையே. (குறுக்கீடு) அதைப் பற்றி நீங்கள் என்னிடம் கேட்கவில்லை (குறுக்கீடு) நான் அதைத்தான் சொல்லிவிட்டேன். அதிலே பிரச்சினை வேண்டாம், அதுபற்றி நான் ஏற்கெனவே ஓர் அறிவிப்புச் செய்திருக்கிறேன். (குறுக்கீடு). அதற்கு மேல் அதிலே வேண்டாம். (குறுக்கீடு) ஆகவேதான் நான் சொல்கிறேன். அதனால்தான் நான் இங்கே அறிவித்தேன். இந்தப் பிரச்சினைபற்றிக் கேட்கப் போகிறேன் என்று நீங்கள் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடு)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முக்கியப் பிரச்சினை பற்றி என்னுடைய கவனத்திற்கு திரு. பரிதி இளம்வழுதி ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். செங்கோட்டையிலிருந்து மதுரை நோக்கி வந்துகொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது பற்றிய பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி அளித்திருக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி. (குறுக்கீடு)

5. பேரவைத் தலைவர் ஏற்கெனவே அறிவிப்புச் செய்திருக்கிற ஒரு பொருள் பற்றி முன் அனுமதியின்றி உறுப்பினர்எழுப்புதல்-பேரவைத் தலைவரின் தீர்ப்பு-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு, நீங்கள் என்னிடம் கேட்காமல் எழுப்புகிறீர்கள். (குறுக்கீடு) ஒரு பிரச்சினை கேட்கப்பட்டது, அந்த ஒரு பிரச்சினைக்கு இப்போது முடிவு கண்டிருக்கிறோம். (குறுக்கீடு) சட்டசபை சம்பந்தப்பட்டது என்றால் என்னிடம் கேட்டிருக்கவேண்டும், ஆனால் நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு) என்னிடம் கேட்டிருக்கவேண்டும் அல்லவா? நீங்கள் என்ன பிரச்சினை என்று என்னிடம் கேட்டிருந்தால் நான் உங்களுக்கு அனுமதி அளித்திருப்பேன் (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன் என்று ஒரு பிரச்சினைக்குச் சொல்லியிருந்தேன். அதை திரு. பழனிசாமி அவர்கள் எழுப்பி, அந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதிலளித்து, என்னுடைய தீர்ப்பையும் வழங்கி இருக்கிறேன். அது தவிர நீங்கள் என்னிடம் எதற்கும் அனுமதி பெறவில்லை. எனவே அனுமதி பெறாமல் அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு).

(திரு. எஸ். திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேறினார்)

திரு. திருநாவுக்கரசு பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது.

6. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் வழிப்பறிக் கொள்ளையர்கள் பயணிகளைத் தாக்கியது குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு இளம்வழுதி.

***திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று செங்கோட்டையிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்த, பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளிடம் அதே பஸ்ஸில் பயணம் செய்த கொள்ளையர்கள் சிலர் அரிவாளால் தாக்கியும், வெடிகுண்டு வீசியும் தங்க நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள். கத்தியைக் காட்டி கண்டக்டரை மிரட்டியபோது பஸ் மெதுவாகச் சென்றுகொண்டு இருந்த காரணத்தால் கண்டக்டர் அந்த பஸ்ஸில்

1994 ஏப்ரல் 5] [திரு. இளம் வழுதி]

இருந்து குதித்து பின்னாடி வந்த வேறு ஒரு வண்டியில் ஏறிச் சென்று பாறைப்பட்டி என்ற கிராமத்தில் இருக்கின்ற மக்களை எல்லாம் திரட்டிக் கொண்டு வருவதற்குச் சென்றார். இதற்கிடையில் டிரைவரிடம் சென்று கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி, பஸ்ஸை நிறுத்தாமல் ஓட்டு என்று சொன்னதற்கு, வேறு வழியில்லாமல் அவரும் அப்படி ஓட்டிய அந்த நேரத்தில், அந்தக் கொள்ளையர்கள், பயணம் செய்த பயணிகளிடமிருந்து ஏறத்தாழ 24 பவுன் தங்க நகைகளைக் கொள்ளையடித்து இருக்கிறார்கள். பஸ்ஸில் இருந்து குதித்துச் சென்ற கண்டக்டர் கிராமத்தில் இருக்கின்ற மக்களைத் திரட்டிக் கொண்டு வருவதற்குள் கொள்ளையர்கள் தங்கள் காரியத்தை முடித்துக்கொண்டு இறங்கி குதித்து ஓடியிருக்கிறார்கள். பஸ்ஸில் இருந்தவர்கள் திருடன், திருடன் என்று கூச்சல் போட்டவுடனே அந்த வழியாக வந்த அடைக்கலம் என்பவர் தன்னிடம் வைத்திருந்த டார்ச் லைட் மூலம் அவர்கள் மீது அடித்துப் பார்த்திருக்கிறார். உடனே கொள்ளையர்கள் துப்பாக்கியால் அவரையும் சுட்டிருக்கிறார்கள். அவரும் பலத்த காயம் அடைந்திருக்கிறார். **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்தப் பிரச்சினை பற்றித்தான் பேசவேண்டும். இந்த சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்த பிரச்சினை பற்றித்தான் நீங்கள் குறிப்பிட வேண்டும். (குறுக்கீடு) அது அவைக்குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் பொது விவாதத்தில் பேசுகிறபோது என்ன வேண்டுமானாலும் பேசலாம்; ஆனால் இதில் பேசுகிறபோது இந்தக் குறிப்பிட்ட பிரச்சினைக்குள்ளேதான் நிற்கவேண்டும்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கேட்கிறபோது இந்த அவையில் இதர அலுவல்களை ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை நாங்கள் விளக்குகிறபோது எல்லாவற்றையும் சொல்லியாக வேண்டும். உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்திருக்கிறேன். அதற்குத்தான் உங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறேன்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கலாம். ஆனால் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கவில்லை என்று உங்களால் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*1994 ஏப்ரல் 5*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி இளம்வழுதி, உங்களுக்குக் கொடுத்திருக்கிற வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் பற்றித்தான் சொல்கிறேன். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் நாட்டிலே நடைபெறுகிற அநியாயங்களையும், குற்றங்களையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் இந்தச் சட்டமன்றம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில்தான் இருக்கவேண்டும். மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11.30

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருகிறார் என்று சொன்னால் அதைக் கொண்டுவருவதற்கு அனுமதிக்கலாம் என்று தாங்கள் முடிவெடுக்கிற நிலையில் அதைக் கொண்டுவருவதற்கான காரணம் என்ன என்பதை மட்டும்தான் உறுப்பினர் சொல்லவேண்டும் என்று இருக்கிறது. ஆக அதைக் கொண்டுவரவேண்டியதன் அவசியம் என்ன? அந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே அது எப்படி அவசர முக்கியத்துவம் பெறுகிறது என்ற காரணத்தை மட்டும்தான் சொல்லவேண்டுமே தவிர ஒத்தி வைத்ததற்குப் பிறகு வேண்டுமானால் அவர்கள் சொல்கிறபடி வாதாடலாம். அப்பொழுது விளக்கங்களைச் சொல்லலாம் இப்போது காரணம் தான் சொல்லவேண்டுமே தவிர அதற்குள்ளே போய் எந்தப் பொருளைப் பற்றியும் பேசக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானமாக இல்லை. (குறுக்கீடு) கேளுங்கள், எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்கின்ற ஒரு நல்ல எண்ணத்தின்படிதான் நம்முடைய பேரவை விதிகளின்படி ஒரு நாளைக்கு ஒரு பிரச்சினைக்கு மேலே எடுத்துக்கொள்ளமுடியாது என்று இருந்தாலும், உங்களுக்கே இன்னொரு பிரச்சினைக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதற்காக, இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் அனுமதித்திருக்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதாவது நீங்கள் அனுமதித்த பிறகுதான் விரிவாகப் பேசமுடியும். ஆனால் அவையை ஏன் ஒத்திவைக்கவேண்டும் என்பதற்குச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று விதியிருக்கிறது.

1994 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி என்றால் இன்னொரு பிரச்சினையை இன்றைக்கு நீங்கள் எழுப்ப வேண்டாமா (குறுக்கீடு) இதையே திரும்பத் திரும்ப நீங்கள் பேசிக்கொண்டிருப்பது வேண்டாம். (குறுக்கீடு) இன்னொரு பிரச்சினைக்கும் உங்களுக்கு அனுமதி அளிக்க இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு எதிர்க்கட்சிக்குரிய கடமையுணர்வோடு இங்கே பிரச்சினையை அவையின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அதை ஏற்று அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2-4-1994 அன்று மாலை செங்கோட்டையில் இருந்து 40-க்கும் மேற்பட்ட பயணிகளுடன் TN --59--0636 என்ற எண் கொண்ட பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று மதுரையை நோக்கிப் புறப்பட்டு உள்ளது.

இரவு சுமார் 10 மணி அளவில், காமராஜர் மாவட்டம் அழகாபுரியைத் தாண்டி அந்தப் பேருந்து சென்று கொண்டிருக்கும்போது, அந்தப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த அடையாளம் தெரியாத 5 பேர் திடீரென்று நாட்டுத் துப்பாக்கி, அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் வண்டியின் ஓட்டுநர், நடத்துநர், பயணிகள் ஆகியோரைப் பயமுறுத்தி, பயணிகளிடமிருந்து நகைகளையும் இதர உடமைகளையும் கொள்ளை அடித்துள்ளனர். 5 அல்லது 6 பேர் கொண்ட அந்த சமூக விரோதக்கும்பல், உடமைகளைத் தர மறுத்த பயணிகளை, தங்கள் கைகளில் வைத்திருந்த ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதாகத் தெரிகிறது. கொள்ளைக்காரர்களின் செயலை எதிர்த்த, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ராஜபாளையம் கிளையின் மேலாளர், திரு. சூரப்பையா என்பவர்மீது நாட்டுத் துப்பாக்கியால் சுட்டதாகவும் அதனால் அவருக்குத் தாடையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. மேலும் திரு. மணி, அவரது மனைவி திருமதி சுந்தரவல்லி, திரு. துரைப்பாண்டி, திருமதி பார்வதி ஆகியோரையும் கொள்ளைக்காரர்கள் தங்களிடம் இருந்த ஆயுதங்களால் காயப்படுத்தியதாகத் தெரிகிறது. 16 சவரன் நகைகளும் 1,250 ரூபாயும் பயணிகளிடமிருந்து கொள்ளை அடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

சமூக விரோதக் கும்பல், பேருந்து ஓட்டுநரைப் பயமுறுத்தி, பேருந்தினை மெதுவாக ஓட்டிக் கொண்டு செல்ல வைத்துள்ளனர்.

அந்த நிலையில், பேருந்தின் நடத்துநர் திரு. ராஜசேகரன், பேருந்திலிருந்து தாவிக்குதித்து, பின்னால் வந்த ஒரு பேருந்தில் ஏறிக்கொணடு, அந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்களிடம் நடந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார். அவர்களுடைய துணையுடன், சம்பவம் நடந்த பேருந்தைக் கடந்து, மடக்கத் திட்டம் தீட்டியுள்ளனர். அதற்கு முன்னதாகவே, கொள்ளை அடித்த *5* நபர்களும் சின்னசித்துலோட்டி குளத்தருகில் பேருந்திலிருந்து தாவிக்குதித்துத் தப்பி ஓடியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் பாறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அடைக்கலம், திரு. பூச்சி, திரு. சுந்தரம் ஆகியோர் அந்தப் பக்கம் சென்றுள்ளனர். இருட்டில் சிலர் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்த திரு. அடைக்கலம் தனது கையில் வைத்திருந்த டார்ச் விளக்கை அடித்து, அவர்கள் யார் என்று பார்த்துள்ளார். தங்களை அந்த மூவரும் அடையாளம் கண்டு கொண்டு விடக்கூடாது என்பதற்காக, அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன், திரு. அடைக்கலத்தை நோக்கி நாட்டுத் துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். திரு. அடைக்கலத்தின்மீது குண்டு பாய்ந்ததால் அவர் காயம் அடைந்துள்ளார். அவருடன் வந்த இரண்டுபேரும், இதைக் கண்டதும் ஓடி விட்டார்கள்.

சம்பவத்தைப் பற்றிய முதல் தகவல் கிடைத்த உடன், காமராஜர் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரும், மதுரை ஊரக மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரும், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரனை நடத்தி உள்ளனர். பின்னர், மதுரை சரகக் காவல் துறைத் துணைத் தலைவரும், இராமநாதபுரம் மாவட்ட காவல் துறைத் துணைத் தலைவரும், சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

முற்பகல் *11-35*

சம்பவத்தில் காயமடைந்த திரு. சூரப்பையா, திரு. அடைக்கலம், திரு. மணி, திருமதி சுந்தரவல்லி, திரு. துரைப்பாண்டி, திருமதி பார்வதி, திருமதி லட்சுமி தேவியம்மாள் ஆகியோருக்கு, மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. திரு. அடைக்கலம் மற்றும் திருமதி பார்வதி ஆகியோர் மட்டும் தற்போது உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தில் காயம் அடைந்தவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேரையூர் காவல் நிலையக் குற்ற எண் *98/94*-ல், இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு *397*, இந்திய படைக் கலன்கள் சட்டம் (Indian Arms Act) மற்றும் வெடிமருந்துகள் சட்டம் (Explosives Act) ஆகியவற்றின்கீழ், பேருந்தில் நடந்த கொள்ளை மற்றும் வன்முறைச் சம்பவத்தை ஒட்டி

1994 ஏப்ரல் 5] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடம் நத்தம்பட்டி காவல் நிலைய ஆளுகைக்கு உட்பட்ட இடம் என்பதால், அந்த வழக்கு நத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பாறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அடைக்கலம் என்பவரை கொள்ளைக் கும்பல் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டது தொடர்பாக பேரையூர் காவல் நிலைய குற்ற எண் 99/94-ல், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307, இந்திய படைக் கலன்கள் சட்டம் (Indian Arms Act) மற்றும் வெடி மருந்துகள் சட்டம் (Explosives Act) ஆகியவற்றின்கீழ், மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் கிடைத்த தடயங்கள் மற்றும் முதல் புலன் விசாரணையில் கிடைத்த தகவல்களின் பேரில் இந்த சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட 5 பேரும் தென் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும் என்ற அடிப்படையில் காவல் துறையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர். கூமாப்பட்டி மற்றும் வத்திராயிருப்பு மலைப் பகுதிகளில், இவர்கள் ஒளிந்திருக்கக் கூடும் என்கின்ற எண்ணத்தில் காவல் துறையினர் அந்தப் பகுதியை முழுமையாக தேடியுள்ளனர். மேலும், சந்தேகப்படுகின்ற இடங்களுக்குச் சென்று இந்தக் கும்பலைப் பற்றி விசாரணை செய்து கண்டுபிடிக்க காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் 4 தனிக் குழுக்கள் (4 Special Parties) அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்ட காவல் துறையின் சார்பிலும், ஒரு தனி காவல் படை (Special Police Team) அமைக்கப்பட்டது. இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ள காவல் துறையின் மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. மேலும் விரல் ரேகை நிபுணர்களும் (Finger Print Experts) மற்றும் தடய அறிவியல் நிபுணர்களும் (Forensic Science Experts) இந்த வழக்கைத் துப்பு துலக்குவதில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். காவல் துறை தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையின் காரணமாக உபயோகமான தகவல்கள் கிடைத்துள்ளன. அந்தத் தகவல்களின் அடிப்படையில் இந்தச் சட்ட விரோதக் கும்பல், சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் காமராஜர் மற்றும் மதுரை ஊரக மாவட்ட காவல் துறையின் சார்பில், ஒரு கூட்டு காவல் துறை குழு, (Joint Police Party) கோவில்பட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் காவல் துறையினரால் கண்டு எடுக்கப்பட்ட, வெடிக்காத நாட்டு வெடிகுண்டைப் பரிசோதனை செய்ததில் இந்த வெடிகுண்டு சக்தி

வாய்ந்தது அல்ல என்றும், அலுமினிய பவுடருடன் வேறு சில பவுடர்களையும், சிறிய கற்களையும், துணியினாலும், நூலினாலும் கட்டி தயாரிக்கப்பட்ட ஒரு வெடிகுண்டு என்றும் தெரிய வருகிறது. இந்த வெடிகுண்டின் எடை 250 கிராம் ஆகும். சில செய்தித் தாள்களில், செய்தி வெளி வந்துள்ளது போல, எந்த ஒரு வெடிகுண்டும் பேருந்தில் வெடிக்கவில்லை. நாட்டுத் துப்பாக்கி ஒன்றை, இரண்டு முறை உபயோகித்து இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த நாட்டுத் துப்பாக்கியும், வெடிகுண்டும், இந்தக் குற்றவாளிகளுக்கு எங்கிருந்து வந்திருக்கக்கூடும் என்ற ஒரு தகவலும், காவல் துறையினருக்குக் கிடைத்துள்ளது. மதுரை ஊரக மாவட்ட விரல் ரேகை நிபுணர்கள் கண்டுபிடித்த சில விரல் ரேகைகளைக் கொண்டு, சந்தேகப்படும் சில நபர்களைத் தேடி, விசாரணை செய்து வருகின்றனர். எனவே, இந்தத் தகாத செயல்களில் ஈடுபட்டுள்ள நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு, காவல் துறையினர் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர் என்பதையும், அவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரவு நேரங்களில், பெருவழித் தடங்களில் செல்லும் பேருந்துகளில், கொள்ளை அடிப்பவர்களைப் பிடிப்பதற்காக, சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டும் என்று, மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு, அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலும் vulnerable என்று கருதும் பகுதிகளை ஆய்வு செய்து, அத்தகைய பகுதிகளில், ஆயுதம் தாங்கிய காவல் படையினர், இரவு ரோந்து சுற்றிவர வேண்டும் என்று, காவல் துறையினருக்கு ஆணை வழங்கப்பட்டு உள்ளது. இதற்கு முன்பு தென் மாவட்டங்களில், இப்படிப்பட்ட சம்பவங்களில் சம்பந்தப்பட்ட, சமூக விரோத சக்திகள் பிடிக்கப்பட்ட பின்னர், இத்தகைய சம்பவங்கள், இந்தப் பகுதிகளில் நடைபெறாமல் இருந்தன என்பதையும் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இத்தகைய சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இருக்க, போக்குவரத்துக்கழக நிர்வாகங்களுடன் மாவட்ட காவல் துறை இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும், அவசியம் ஏற்படும்போது காவல் துறையினர் இரவு நேரங்களில் பயணம் செய்பவர்களைப் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது என்பதையும், விரைவில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*